IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.36/2014
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மல்லிகா | Caste | : | |
| Husband Name | : | ரவி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of February, 2026.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–

1. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு என் தாத்தா சொத்தில் 5 ல் 1 பாகம் உ ள்ளது அதனால் தாக்கல் செய்துள்ளேன். 1987 ல் எனக்கு திருமணம் ஆனது. மேற்படி கல்யாணம் ஆனதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தாயார் ஜெயாம்மாள் என்னுடைய பெயருக்கு ஏற்கனவே 20 சென்ட் நிலத்தை செட்டில்மென்ட் ஆக எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய தாயார் ஜெயாம்மாள் 2, 3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகளின் தந்தையான இறந்த சுப்பிரமணிக்கு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் எழுதவில்லை. அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் எனது தந்தை இறந்த சுப்பிரமணிக்கு அதாவது அவரது மகனுக்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. வா.சா.ஆ.19 ல் சர்வே எண்.18/1 என்று உள்ளது ஆனால் பிரமாண வாக்குமூலத்தில் 181/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் 18/1 தான் ஆகும். 1988 ல் வா.சா.ஆ.19 ன் படி அடமானம் கொடுக்கப்பட்டுள்ளது அடமானம் 1.50 ஏக்கரில் 60 சென்ட் அடமானம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா,4 உயில்

முன்னிலைக்கு 69 செண்ட் இறந்த சுப்பிரமணிக்கு அவரது தகப்பனார் கோவிந்தராஜ் மந்திரி பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

3. வில்லங்க சான்றுடன் சேர்த்து வா.சா.ஆ–19 ஆனது இந்த வழக்கில் தாக்கல் செய்யாததால் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவத்தில் நான் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தரப்பு சான்றாவனம் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதால் நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI